# Chapter 2.2 கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்

## மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைச் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
இம்மை என்ற சொல் குறிக்கும் பொருள் ……………………….
அ) இப்பிறப்பு
ஆ) மறுபிறப்பு
இ) பிறப்பு
ஈ) முற்பிறப்பு
Answer:
அ) இப்பிறப்பு

Question 2.
காரணமாகின்றது என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ……………………….
அ) காரண + மாகின்றது
ஆ) காரண + ஆகின்றது
இ) காரணம் + மாகின்றது
ஈ) காரணம் + ஆகின்றது
Answer:
ஈ) காரணம் + ஆகின்றது

Question 3.
வறுமை இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் .............................
அ) செழுமை
ஆ) இன்மை
இ) செம்மை
ஈ) ஏழைமை
Answer:
அ) செழுமை

Question 4.
பொருள் + செல்வம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............................
அ) பொருள்செல்வம்
ஆ) பொருள்ச்செல்வம்
இ) பொருட்செல்வம்
ஈ) பொருட்ச்செல்வம்
Answer:
இ) பொருட்செல்வம்

Question 5.
பொருள் + இல்லார்க்கு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................
அ) பொருளில்லார்க்கு
ஆ) பொருள்ளில்லார்க்கு
இ) பொருலில்லார்க்கு
ஈ) பொருள் இல்லார்க்கு
Answer:
அ) பொருளில்லார்க்கு

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. பழைமை + மொழி = ................................
2. நன்மை + வழி = ................................
Answers:
1. பழைமை + மொழி = பழமொழி
2. நன்மை + வழி = நல்வழி

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. பணமென்றால் = ................................ + ................................
2. தொலைக்காட்சி = ................................ + ................................
Answers:
1. பணமென்றால் = பணம் + என்றால்
2. தொலைக்காட்சி = தொலை + காட்சி

ஈ . தொடரை முழுமை ஆக்குக. (பத்தும், வளம், கல்வி)

1. பசி வந்திடப் ...................... போகும்.
2. கேடில் விழுச்செல்வம்......................
3. பொருளால் நம் வாழ்வு ...................... பெறும்.

1. பசி வந்திடப் பத்தும் போகும்.
2. கேடில் விழுச்செல்வம் கல்வி.
3. பொருளால் நம் வாழ்வு வளம் பெறும்.

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

Question 1.
களர்நிலத்துக்கு ஒப்பானவர் – யார்?
Answer:
கல்வி கற்காதவரே களர்நிலத்துக்கு ஒப்பாவர் ஆவர்.

Question 2.
கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?
Answer:
பொருட்செல்வம் கள்வரால்(திருடரால்) கவர்ந்து செல்லக்கூடியது ஆகும்.

Question 3.
'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் எழுதுக.
Answer:

- கற்காதவன் பயன்படாத நிலம் போன்றவன்.
- கல்வி கற்றவருக்கு மட்டுமே மதிப்பு கிடைக்கும்.
- பொருட்செல்வம் கொடுத்தால் குறையும், திருடரும் திருடுவர். ஆனால் கல்வி குறையாது. திருடவும் முடியாது.
- இப்பிறப்புக்கும் மறுபிறப்புக்கும் பயன் தருவது கல்வியே. ஆகியவை 'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்கள் ஆகும்.

Question 4.
பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.
Answer:

- வள்ளுவரும் பொருள் இல்லாதவருக்கும் உலகம் இல்லை என்கிறார்.
- கல்வி கற்பதற்கும் பணம் தேவை.
- பணம் இல்லாதவன் பிணம் ஆகியவை பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்கள் ஆகும்.